ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



நவம்பர் - 2015

40/=

"அவன் உயிரோடிருக்கும்போது
அவனை உயிருள்ள உறவாய் நேசி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 2015

மலர் - 47 இதழ் - 10

**ஆசிரியர்**

அருட்தந்தை: ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.



## உள்ளே

அன்புடன் உங்களோடு ................ 01
குடும்பங்களும் தொடர்பு ............... 02
எண்ணிப்பார்க்கையில் ................. 04
நற்கருணை அதிசயம் ................... 05
கார்த்திகையின் மகிமை .............. 05
மாணவர் பக்கம் ............................ 06
மரணத்தின் பின் ............................ 08
இதுதான் அரசியல் ........................ 09
கத்தோலிக்கத் திருமறை ............. 11
நமது உதவி நமக்கு ..................... 12
மருத்துவம் ...................................... 14
உலகெங்கும் மரியாள் .................. 16
யாழ் மறைமாவட்டத்திற்கு ........... 17
எமது ஆயரின் இலண்டன் ........... 19
மறைமாவட்ட அர்ப்பண .............. 20
புனிதர்களை அறிவோம் ............... 21
சர்வதேச மாணவர் தினம் ............ 22
சந்திப்போமா சற்று சிந்தி .............. 23
புதிய பார்வை ................................ 24
திருஅவைச் செய்திகள் ................ 26
திருவிவிலியம் கற்போம் ............... 27
அறிவை வளர்ப்போம் .................. 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

நவம்பர் 02
மரித்தவர்களின் ஆத்துமாக்களுக்கான நாள்
கால்கள் நடை பயணிக்கின்றன
உயிரோடிருப்பவர்களின் ஆத்துமாக்கள்
இறந்தவர்களின் ஆத்துமாக்களை நோக்கி ....
கல்லறைத் தோட்டத்தை
பூந் தோப்பாக்க.....
வருடம் பூராகச் சேர்த்து வைத்த
கண்ணீர் மழை பொழிய ...
நாம் அனைவரும் பயணிக்கிறோம்
கல்லறைத் தோட்டம் நோக்கி ......

இது எனது நாள்
என்னுடைய நாளில்
எனது இஷ்டம் என்று
பல கஷ்டங்களோடு வாழும்
நமக்கு இவ்வுலகில்
எத்தனை திமிர்?
எத்தனை பகை?
எத்தனை சூழ்ச்சித் திட்டம்?
எத்தனை பொறாமைக் கண்ணிகள்?
எத்தனை போராட்டங்கள்?
எத்தனை இகழ்ச்சி?
எத்தனை புகழ்ச்சி?
இறுதியில் ....
ஏழைக்கும் அதே
ஆறடி மண்தான் சொந்தம்
பணக்காரனுக்கும் அதே
ஆறடி மண்தான் சொந்தம்.

அன்புமிக்க சகோதரங்களே!

நம்முடைய நெருக்கமான உறவுகள் மரணத்தின் பின் நித்திய உறக்கம் செய்கிறார்கள் கல்லறைகளில்... அவர்கள் நம்மோடிருக்கையில் நாம் அவர்களோடு எப்படியிருந்தோம்? என்ன செய்தோம்? என்று சற்றுச் சிந்தியுங்கள்.... நம்மை உலகிற்கு அறிமுகம் செய்த தாய், தந்தையர்கள் என்று, வாழையடி வாழையாக வரும் தலைமுறைகளை எப்படி? என்ன செய்தோம்? இன்று அவர்களே கல்லறைகளில் நித்திய உறக்கம் செய்கிறார்கள். உங்கள் அன்புத் தாய், தந்தையர்களாக, உங்கள் அன்புச் சகோதரங்களாக, உங்கள் அன்புப் பிள்ளைகளாக, உங்கள் அன்புக் கணவன், மனைவியாக அங்கே இளைப்பாறுகிறார்கள். கடவுள் நம்மை இவ்வுலகில் பிறக்கச் செய்து நம்மை மரிக்கச் செய்கிறார். அந்த நாட்களின் எல்லைகளில் அவர் நம் ஒவ்வொருவரையும் தம் கண்மணிக்குள் கூர்ந்து கவனிக்கிறார் நாம் இவ்வுலகில் என்ன செய்தோம் என்று? நாம் நம்மைப் படைத்த கடவுளை நினைத்து ஜெபித்தோமா? இல்லை மறுதலித்து வாழ்ந்தோமா? என்று சகோதரங்களே சற்றுச் சிந்தியுங்கள்.... இறுதியில் நம்மைப் படைத்தவரிடந்தான் நம் உயிர் சரணாகதி அடையும். நாம் கடவுளை நோக்கி உயிரோடிருக்கும் ஆத்துமாக்களாக உயிரோட்டமுள்ள ஜெப வாழ்க்கையைக் கடவுள் கரத்தில் ஒப்புக்கொடுக்கும் மக்கள் கூட்டங்களாக வாழக் கற்றுக்கொள்வோம்.

சகோதரங்களே!

நீங்கள் தேடிய புகழ், நீங்கள் தேடிய பணம், சொத்து உங்கள் கல்லறைகளில் உங்களோடு வாழ வருவதில்லை. உயிரோடிருக்கும் நாட்களில் இயேசு கூறிய போதனையின் வழிநடக்க ஆரம்பியுங்கள். ஆடையின்றி வருபவனுக்கு ஆடை கொடுங்கள். உணவின்றி வருந்துவோரின் பசி தீருங்கள். ஆறுதல் தேடி உன்னை நோக்கி பயணிப்பவர்களுக்கு எட்டி உதைக்காமல் ஆறுதல் அளிக்கும் அருமருந்தாக மாறுங்கள்.

வீதியோரம்
தெருவில் கூட்டம்
நீ சொகுசு பயணம் செய்யும்
வேளை உன் சகோதரன்
வீதியில் வீழ்ந்து கிடப்பதை
கண்டும் காணாமலும் இருந்துவிட்டு
நீ கல்லறையில் அவனைத்தேடி
எந்தப் பலனும் இல்லை
அவன் உயிரோடிருக்கும்போது
அவனை உயிருள்ள உறவாய் நேசி.

ஆசிரியர்

இன்றைய சிந்தனை

**“வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்;**
**இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்”**

உரோ 14:8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பணியாற்றும் உளநலத் துறையும் அதில் நாங்கள் அன்றாடம் சந்திக்கின்ற குடும்பங்கள், அந்தக் குடும்பங்கள் தங்களது வெற்றிகரமான வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள் குடும்பங்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள், அதன் விளைவாக அன்றாடம் நிகழுகின்ற குடும்ப வன்முறைகள், பிரிவுகள், விவாகரத்து, தற்கொலை முயற்சிகள், தற்கொலை மரணங்கள், கொலை, பலதாரத் திருமணம், திருமணத்திற்குப் பிந்திய வேண்டாத உறவுகள், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான பிரச்சினைகள், பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமான பிரச்சினைகள் போன்ற நாம் நாளாந்தம் பொதுவாகக் கையாளுகின்ற உளநலப் பிரச்சினைகள் மேலான உளசமூகப் பிரச்சினைகளாக உருவாகி, பெருகி வருவதை அண்மைய புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் விலக்கப்பட்ட கனியை உண்டதன் பலனாகக் கடவுளால் முதற் பெற்றோர் சபிக்கப்பட்டனர். முதற் குடும்பம், அந்த முதற் குடும்பத்தில் கணவன்-மனைவிக்கான தொடர்பாடல் அவர்களிற்கும் இறைவனுக்கும் இடையில் இருந்த பயனுடைய தொடர்பாடல். அந்தத் தொடர்பாடல் பிழைத்து, தமது விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப வாழ விளைந்த அதிர்வுகளின் எதிரொலியை வேதாகமம் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. மரியாவும், யோசேப்பும் கணவன் மனைவியாக வாழ்ந்த வாழ்க்கையில் கடவுளால் மரியா கருக்கொண்டு, அந்த மகவைப் பல இடர்களுக்கு மத்தியில் மாட்டுத்தொழுவத்தில் பெற்றெடுத்த கிறிஸ்துவின் வருகையும், மூவொரு தேவனாக, தந்தை, மகன், தூய ஆவியுமாக, நாம் வணங்குகின்ற சூசை, மரியாள், கிறிஸ்து ஆகிய மூவரும், அவர்தம் அயலவர் எனும் இடையர்கள், வானதூதர்கள் அடங்கலாக எமது முதல் குடும்பம், உறவினர், சமூகம் உலகிற்கு அறிமுகமாகிற்று. இதன் வழி தோன்றிய சந்ததிகள் பல்கிப் பெருகிப் பூமியை நிரப்பி வாழ்கின்ற இன்றைய காலமும், அதன் தற்போதைய

- Dr. P. யூடி ரமேஸ் ஜெயக்குமார் -
MBBS(SL), D!Psych(Col), FMH(Can)



# குடும்பங்களும் தொடர்பாடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளும் அவ்வப்போது நடந்தேறுகின்ற உள்நாட்டுப் போர் அல்லது மனிதனால் ஏற்படும் அனர்த்தங்கள், அதன் பிரதிபலிப்பாக இன்றும் அவதானிக்கின்ற கைதுசெய்யப்பட்டு சிறைப் பட்டோர், காணாமல் போனோர், இடம்பெயர்ந் தோர், உள்ளக விசாரணை, *Hybrid* நீதிமன்றம் என்ற பட்டியல் நீண்டே செல்கிறது. மறுதலை யாக இலங்கையில் நடைபெற்ற, நடைபெறு கின்ற அனர்த்தங்கள் குறிப்பாக, 2004 மார்கழித் திங்கள் நடந்தேறிய "சுனாமி", அதன் தாக்கங் கள், இவற்றிற்கு மேலாக உலக மயமாதல், திறந்த பொருளாதாரம், இலத்திரனியல், அடுக்கடுக்காக வங்கிகள், கடன் கொடுக்கும் நிறுவனங்கள், வெளிநாட்டு மோகம், லீசிங் கட்டணத்தில் வாகனங்கள், உடனடி உணவு, அதிரடி விலைக்கழிவு போன்றவற்றின் நேரடியான மறைமுகமான வலைப்பின்னல்கள் ஏற்ப டுத்தும் பாதிப்புகள், "ஆழ வேரூன்றி விழுதெ றிந்து



விருட்சமாக நிற்கும்" நிலையில் எந்த வகையில் ஆரோக்கியமான குடும்பங் களை உருவாக்கப்போகிறோம். அல்லது நடை பெறுகின்ற நிகழ்வுகளில் இருந்து எமது வாழ்க் கைக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளப் போகின்றோம்? இவை யாவிற்குமான விடை களைக் கண்டறிவதே மிகப் பயனுடைய தொடர்பாடலாக அமையும்.

ஒரு சமுதாயத்தின் மக்கள், அச் சமுதாயத் தின் பண்பாடு, விழுமியங்கள், ஒழுக்க நெறி முறைகள், கருத்துகள், நம்பிக்கைகளுக்கமைய அதன் ஒழுக்கங்களையும், நியமங்களையும், கருத்துகளையும் மாற்றியமைக்கக் கூடியவர்க ளாகவும் இருக்கின்றனர். ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையும், சமுதாயம் என்கின்ற வட்டத்திற் குள்ளேயே நிகழ்கின்றது. உள்நாட்டு யுத்தங்கள், இயற்கை அனர்த்தங்கள், அரசியல் மாற்றங்கள், இதனால் ஏற்படும் தனி மனித, குடும்ப, சமூக பாதிப்புகள் ஆகிய எல்லா நிலையிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதற்கு இலங்கை என்ற நாடும், அந்த நாட்டில் வாழுகின்ற சிறு பான்மைச் சமூகமும், வடக்கு கிழக்கு உட்பட்ட ஏனைய மாகாணங்களும் மிகச் சிறந்த உதார ணங்கள். முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட மனித அவலம், உள்ளூர், வெளியுலகத் தொடர்புகள் அற்று ஒரு தொகுதி மக்கள் பட்ட வேதனைக ளும்



காலம் கடந்தாலும் ஆற்றுப் படுத்தலுக்காக ஐக்கிய நாடுகள் வாசல்வரை எதிரொ லிப்பதுவும், அதற்கான தடயங்கள் , தகவல்கள், உள்ளக, வெளியக விசார ணைகள் நடைபெற்ற, நடைபெறப்போகின்ற விதங்கள், இன்றும் நவீன தொடர்பாடல் சாதனங்கள் பயன்பட்ட விதங்கள், அசைக்க முடியாது என்று இறுமாப்புடன் இருந்த முன்னாள் ஜனாதிபதியையே வீழ்த்துவதற்கான பொறிக ளில் நவீன தொடர்பாடல் முறைகள் பயன்பட்ட விதமும், செங்கலடி பெற்றோர் கொலையில் பெற்ற மகளே கைபேசியூடாக தன் காதலன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணிப்பார்க்கையில் ...

நம்மவர்கள் பலரும் ஆலோசனை கொடுப்பதில்
படுகெட்டிக்காரர்கள்.
அதிலும் ஒருவரது தன்னம்பிக்கையைக்
குலைக்கும் வண்ணம் ஆலோசனை
கொடுப்பதென்றால்
பலருக்கும் கரும்பு தின்கின்ற மாதிரிதான்
தாம் ஒன்றைச் செய்துபார்த்து
தோல்வியில் முடிந்ததென்றால்
மற்றவர்களாலும் அதைச் செய்யமுடியாது என்று
கணக்குப் போட்டு அதில் ஈடுபட
அடுத்தவர்களை அனுமதிக்க
அவர்களுக்கு விருப்பம் இராது!
என்னாலேயே முடியவில்லை என்று
சப்புக் கட்டுக் கட்டுவார்கள்.
தன்னம்பிக்கையுடன் எண்ணிப் பார்க்கையில் ..
இத்தகைய பேச்சுக்களைக் காதில் வாங்காமல்
நாம் நமது பணியில் ஈடுபடுவதுதான்
சரியானதென்று தெரியவரும்.
ஒருவரால் முடியாததை
இன்னுமொருவரால் முடியாது என்று
கணக்குப் போடுவது முட்டாள்தனம்!
அவரவர் வேலை முடிவது
அவரவர் ஆற்றலை, தன்னம்பிக்கையை,
விடாமுயற்சியை அடிப்படையாகக் கொண்டது.

— ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் —

சக மாணவனைப் பயன்படுத்தியது வரை நடைபெற்ற, நடைபெறுகின்ற, நடைபெறப்போகின்ற விடயங்கள். இவை அன்றாட செய்திகள்.

தமிழ் சமுதாயத்தில் காணப்படுகின்ற குடும்பங்கள் பெரும்பாலும் கணவன் (தந்தை), மனைவி (தாய்), பிள்ளைகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இருக்கும். சில வேளைகளில் பாட்டன், பாட்டி, மாமன்மார், மாமிமார், அத்தை, சித்தி, சித்தப்பா, பெரியப்பா என இவ்வட்டம் வியாபித்திருக்கும். இந்த உறவுகள் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக உணவருந்தி, கூட்டுக் குடும்பமாக வாழ்வார்கள். தமிழ்ப் பண்பாட்டில் ஒரு வீட்டில் இருப்பவர்களை ஒரு குடும்பமாகப் பார்க்கும் வழக்கமுள்ளது. சில வேளைகளில் சகோதர, சகோதரிகள், பெற்றோர்கள் அருகருகே வாழ்வார்கள். ஒரு கிணற்றையே உபயோகிப்பார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் அயல், அயலாக குடியிருப்பர். இவ்வாறான கிராமத்துக் குடும்ப வாழ்க்கை நகரத்து நரக வாழ்க்கையாக பிரதியீடு செய்யப்பட்டுள்ள இன்றைய நிலையில் அயலவர், அவர்களுடனான தொடர்பாடல், அவர்களின் தேவைகளில் உதவுவது இவையெல்லாம் ஓடி, ஒழித்து வேகமான உலக ஒழுங்கு, தேவைகளைப் பணத்துடன் வாடகை, விலை கொடுத்து பெற்றுக்கொள்ளும் செயலாக மாறியுள்ளது. பணம் இருந்தால் எல்லாவற்றையும் செய்துவிடலாம். "பணமே வாழ்க்கை" வேறொன்றும் தேவையில்லை என்கிறது இன்றைய தொடர்பாடல்.

- தொடரும்....

## சிந்திக்க சில வரிகள் ...8

காலம் அது பொன்னானது என்று அறிவோர்
அதைக் கண்போலக் கருத்தாய்க் காப்போர்
தம் வாழ்வில் உயர்வு பெறுவதைக் காணீர்
காலத்தைக் கோட்டை விட்டோர் தோற்றனர் பாரீர்.



— ராஜ் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை இரத்தமும், சதையுமாக மாறிய அதிசயம்







நற்கருணை இரத்தமும், சதையுமாக மாறிய அதிசயம் ஒன்று மன்னார் – பரப்பாங்கண்டல் கன்னியர் இல்லத்தில் 21.10.2015 அன்று புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது. குறித்த செய்தி கிராமத்தில் பரவியதால் மறுநாள் வியாழக்கிழமை கிராமம் பரபரப்பாகியது. அருட்சகோதரி ஒருவர் குறித்த நற்கருணை இரத்தமும், சதயுமாக மாறியிருந்ததை அவதானித்துள்ளார். பின்னர் பங்குத்தந்தையிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அது பங்குத்தந்தையின் வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டது. இருநாட்களுக்குப் பின் ஆயர் இல்லத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

குறித்த விடயம் பொதுமக்களுக்குத் தெரிந்ததிலிருந்து மன்னார் மறைமாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் சென்று பார்வையிட்டு பயபக்தியோடு வழிபட்டார்கள். நற்கருணை மாற்றம் பெற்று இரத்தமும் சதையுமாக மாறி மனிதனின் இதயம் போலவும், அதற்கருகில் குழந்தையின் உருவம் போலவும், அன்னை மரியாவின் உருவம் போலவும் காட்சியளித்தது. தற்போது கொழும்பில் உள்ள இதன் அடுத்த நகர்வாக உரோம் நகருக்கு கொண்டுசெல்லப்படும் என்று கூறப்படுகிறது.

# கார்த்திகையின் மகிமை!



கல்லறைகள் காவியம் படைத்திடும்
இந்நாள் இறந்த ஆத்துமாக்களின் சங்கமம்
சில்லறைகளாய் சேமித்த பணத்தையும் கூட
பொன்னாளாக்கி பிரித்துவிட்ட உள்ளங்களுக்கு
சொல்லவொனா துயரத்தை பகிர்ந்தே அளித்திடும்
ஒரேயொரு உன்னத நாளிதே!

சுற்றமும் சூழவும் சேர்ந்த அனைவரும்
நித்தமும் நிரந்தரமுமாய் மீளாத்துயரில் ஆழ்ந்தோரை,
கத்தியும், கதறியும், கண்ணீரிலும் சோகத்தை
பக்தியும், பாசமுமாய் புடைசூழ்ந்து வெளிப்படுத்தியே
விரக்தியும், விசும்பலுமாய் மாண்டவரைப் போற்றி
வியந்திடும் வியாகுலமே இந்நாள்!

கார்த்திகைத் திங்கள் இரண்டாம் நாளிலே – கை
கோர்த்திடும் மக்களின் கனிவான தினமிது – மெய்
சிலிர்த்திடும் மேன்மைமிகு தருணமிது – உடல்
வியர்த்திடும் உள்ளங்களின் உள்ளத்தையே
உணர்த்திடும் உன்னதமான தினமிதே – உலக
திருச்சபை உவந்தளித்த நாளிதே!

– கைடி பொன்கலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் பக்கம்

கத்தோலிக்கத் திருமறை


க.பொ.த. (உயர்தரம்)

நில்மினி கஜேந்திரன்

### ஒல்லாந்தரின் ஆட்சியில் கத்தோலிக்கரின் அனுபவங்கள்

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி அவர்களை இலங்கையில் இருந்து முற்றாக விரட்டிவிட்டாலும், அவர்கள் மீண்டும் இலங்கையைத் தாக்கினால் கத்தோலிக்கர்கள் மீண்டும் தங்களுக்கு விசுவாசமாயிருக்காமல் போர்த்துக்கேயருக்கே ஆதரவளிப்பார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. மதமானது கத்தோலிக்கர்களுக்கும், போர்த்துக்கேயருக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பை, உறவை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையிலே போர்த்துக்கேயரின் ஆட்சியும், றோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் மிகவும் நெருங்கிப் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தது. எப்படியென்றால், அவற்றில் ஒன்றை அழிக்காமல் மற்றதை வெளியேற்ற முடியாத நிலையில் இருந்தன.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதையடுத்து, சில போர்த்துக்கேயரும், அவர்கள் வழித்தோன்றல்களும் ஒல்லாந்தருக்குத் தம் விசுவாசத்தை அறிக்கையிட்டதனால், அவர்களின் படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சிறிது காலத்தின் பின் ஒல்லாந்த அதிகாரிகள் தென்இந்தியாவிலுள்ள நாகப்பட்டணத்தைத் தாக்கச்சென்றபோது, ஒரு சில ஒல்லாந்த அதிகாரிகளும், சில போர்த்துக்கேயப் படை வீரர்களுமே யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்தனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர்கள் ஒல்லாந்த அதிகாரிகளைக் கொலை செய்து, கோட்டையைக் கைப்பற்றிப் போர்த்துக்கேயரிடம் திரும்பவும் கொடுக்கத் திட்டமிட்டனர். இச் சதித்திட்டமானது ஒல்லாந்த அதிகாரிகளுக்குத் தெரியவரவே, அவர்கள் இத்திட்டத்தைத் தீட்டிய போர்த்துக்கேயப் படை வீரர்களைக் கைது செய்து, துன்புறுத்திக் கொலை செய்தனர்.



இச்செயல் ஒல்லாந்தருக்கு கத்தோலிக்கர் மீதிருந்த சந்தேகத்தையும், வெறுப்பையும் மேலும் அதிகரிக்கச் செய்தது. கத்தோலிக்கரின் மதப் பணி ஆற்றிய குருக்கள், மறைபரப்பாளர்கள், துறவிகளை நாடு கடத்திவிட்டால், கத்தோலிக்க மதத்தை அழித்துவிடலாம் என்று நினைத்திருந்தது நிறைவேறவில்லை. இதனால், இலங்கையிலிருந்து கத்தோலிக்கரை முற்றாக அழித்துவிட வேண்டிய திட்டங்களைத் தீட்டினார்கள். இதனால் கத்தோலிக்க மதம் முற்றாகத் தடைசெய்யப்பட்டது. கல்வின் மதத்தைத் தவிர, வேறு எந்த மதத்தையாவது போதிப்பது, பரப்புவது, கடைப்பிடிப்பது தடைசெய்யப்பட்டது. இதனால், கத்தோலிக்க ஆலயங்கள், பாடசாலைகள் பறிமுதலாக்கப்பட்டன. ஆலயங்கள் இடிக்கப்பட்டன, சுரூபங்கள் உடைக்கப்பட்டன, பாடசாலைகள் கல்வின் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. குருக்களும், மறைபரப்பாளரும் நாடு கடத்தப்பட்டனர். குருக்களைத் தேடிப்பிடித்துக் கொலை செய்தனர். குருக்களைக் காப்பாற்றுவது, வீடுகளில் இரகசியமாகப் பாதுகாப்பது போன்றவை மரண தண்டனைக்குரிய குற்றங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

கல்வின் மதத்தில் இடம்பெறும் ஆராதனைகளில் கத்தோலிக்கர் பங்குபற்றப் பலவந்தப்படுத்தப்பட்டனர். திருமணம், திருமுழுக்கு, மரணச் சடங்குகளில் கல்வின் மத வழிபாட்டு முறைகளே இடம்பெறவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பணிக்கப்பட்டனர். இவ்வாறு பல்வேறு நிர்ப்பந் தங்களுக்குக் கத்தோலிக்கர் ஆளாகினர்.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் அனுபவித்த மிகப்பெரிய இழப்பு குருக்களையும், மறைபரப்பாளர்களையும் இழந்ததாகும். போர்த்துக் கேயர் காலத்தில் 120 கத்தோலிக்கக் குருக்கள் பணியாற்றினர். ஆனால், ஒல்லாந்தர் காலத்தில் ஒருவர் கூட இருக்க முடியவில்லை. இந்நிலையானது 30 ஆண்டுகள் நீடித்தது. எனவே, இவற்றினால் அற்ப சொற்ப சலுகைகளுக்காக மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தைக் கைவிட்டுக் கல்வின் மதத்தைக் கடைப்பிடிக்கலாயினர். ஒரு சிலரே விசுவாசத்தில் நிலைத்திருந்தனர். குறிப்பாகக் கடலோரப் பகுதியில் வாழ்ந்தோர் ஒல்லாந்தரின் துன்புறுத்தலுக்குத் துணிவுடன் முகம் கொடுத்தனர். வீடுகளில் இரகசிய மாய்க் கூடிச் செபித்தனர். சுருபங்களை மறைத்து வைத்து வழிபட்டனர்.

இவ்வாறு பல்வேறு துன்பங்களுக்கூடாக மறைவாக வழிபட்டுவந்த மக்கள் தாம் வாழ்ந்த இடங் களை விட்டுப் பாதுகாப்பான வேற்று இடங்களைத் தேடிச்சென்றனர். மாந்தையில் வாழ்ந்த மக்கள் தாம் இரகசியமாக வணங்கிவந்த மாதா சுரூபத்தையும் எடுத்துக்கொண்டு அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட மடு எனும் இடத்தை வந்தடைந்து எவ்வித பிரச்சினையுமின்றி அமைதியுடன் வாழ்ந்து வந்தனர். "மருத மடு திருப்பதி" பற்றிய வரலாறு இங்கிருந்தே ஆரம்பமானது. ஒல்லாந்தர், கத்தோலிக்க மதம் இலங்கையில் இருந்து முற்றாக அழிந்துவிடும் என நினைத்திருந்தனர். ஆனால், இறைவனின் திட்டம் வேறு விதமாக மாறியது. இயேசு தம் திருச்சபை யைக் கைவிட்டுவிடவில்லை. பொன்னைப் புடமிடு வது போல் ஒல்லாந்தரின் கலாபனையால் திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு புத்துயிர் பெற்றது.




**ஆசிரியர்** : பள்ளிக்கூடத்திற்கு ஏன் லேட்...?

**மாணவன்** : வரும் வழியில் ஒருவர் தனது பத்து ரூபாயைத் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருந்தார் சார்.

**ஆசிரியர்** : அவர் தொலைத்தால் அவர் தேடிக்கொள்ளட்டும். நீ என்ன அவருக்கு உதவினாயா...?

**மாணவன்** : இல்லை சார், அந்தக் காசு என் காலடியில்தான் கிடந்தது. அவர் போகும்வரையில் காத்திருந்து இப்பொழுதுதான் எடுத்துட்டு வாறன்.



## வாழ்த்துகிறோம்

*06.09.2015 அன்று ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பொது அமர்வில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி : மரியா டெல் மொன்டே அக்ஸிலியடோரா அவர்கள் அனைத்துலகச் சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவருக்குப் பொதுச்சபையில் ஆறு உதவியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இந்த உதவி மேலாளர்களில் ஒருவராக மட்டக்களப்பு ஏழைகளின் சிறிய சகோதரிகளின் இல்ல மேலாளர் அருட்சகோதரி: மரியா கிளாரெட் அவர்கள் 09.09.2015 அன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது எமது நாட்டுக்குக் கிடைத்த கௌரவமாகும்.*



*அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் சென்றவிடமெல்லாம் சேவை மணம் பரவ இறைவனை இறைஞ்சுகிறோம்.*

*- தொண்டன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணத்தின் பின் எனக்கு நடப்பது என்ன....?

உத்தரிப்பு ஸ்தலம் என்பது எரி நெருப்புக் கொண்ட சிறைச்சாலையாகும். உத்தரிப்பு ஸ்தலம் பற்றித் திருச்சபை வல்லுநர்கள் தெரிவிப்பது பற்றிச் சற்று அவதானிப்போம். தூய மறைவல்லுநர்களில் பிரதானமானவரான புனித அகுஸ்தினார் "விண்ணகத்திற்குள் நுழைவதற்கு முன் அவர்களின் பாவங்களைத் தூய்மைப்படுத்துவதற்காக இறப்பின் பின்னர் ஆன்மாக்கள் பயங்கரமான நெருப்பிற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையில் நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவிற்கு அது பயங்கரமானது. பாவம் மன்னிக்கப்பட்டாலும் அதற்கான பரிகாரம் உத்தரிக்கும் இடத்தில் செலுத்தப்பட வேண்டும்" என்று கூறுகிறார்.

புனித தோமஸ் அக்குவைனாஸ் "உத்தரிக்கும் இடத்திலுள்ள எரி நெருப்பானது நரக நெருப்பைப்போலவே பயங்கரமானது. உத்தரிக்கும் இடத்திலுள்ள நெருப்பானது இறைவனின் நீதியிலிருந்து பிறக்கிறது. அது தண்டித்துத் தூய்மைப்படுத்துவதற்காகப் பயன்படுவதால் நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்குக் கொடூரமாயிருக்கும்" என்கிறார்.

நாம் செய்யும் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்தால் உத்தரிப்புத் தண்டனையைக் குறைக்க முடியும். நாம் வாழ்வது கடவுளுக்குப் பணி புரியவும், எமது ஆன்மாவை மீட்பதற்காகவுமே. எம்மில் பலர் கடவுளுக்கு காலை 5 நிமிடம் மாலை 5 நிமிடமும் கொடுத்துவிட்டு மிகுதியான மணித்தியாலங்களை வேலை பார்ப்பதற்கும், ஓய்வுக்கும் செலவிடுகிறோம். பல வருடங்களாகக் கட்டிக்கொண்ட அற்ப, சாவான பாவங்களுக்காக ஒவ்வொருவரும் மரணத்தின் பின்னர் பரிகாரம் தேடியே ஆகவேண்டும். ஆன்மாக்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பது அவர்களை விடுவிப்பதற்கான வல்லமையுள்ள செயல். திருப்பலியை ஒப்புக்கொடுக்க முடியாவிட்டால், திருப்பலியில் பங்குகொண்டு ஒப்புக்கொடுப்பது மேலானது. மீட்கப்பட ஆன்மாக்களின் மகிழ்ச்சியை வார்த்தையால் கூறமுடியாது. அவர்கள்

~ தொடர் 10ம் பக்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்புவோமா....

இலங்கை அரசியலமைப் பின்படிக்கு சர்வதேச நீதி விசாரணைக்கு இடமில்லை என்று இலங்கை சொன்னதை தற்போது சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அப்படியென்றால் அதை அறியாமற் தானா இதுவரை விட்டேனா பார் என்று சர்வதேசம் கச்சை கட்டிக்கொண்டு நின்றது?

தேர்தல்கள் என்பது ஜெனிவாவை ஏமாற்ற என்று நாம் முன்னம் குறிப்பிட்டது நிஜமாகிப் போய்விட்டது. அடுத்தகாய் நகர்வை இலங்கை எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் அரங்கேற்றி சருவதேசத்தை தொடர்ந்தும் ஏமாற்ற வழி பார்க்கும் என்பது திண்ணம்.



# இதுதான் அரசியல்

பாமூர்வேந்தன்



ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. அமெரிக்காவும், இந்தியாவும் தமது சித்து விளையாட்டுக்களை அரங்கேற்றிவிட்டன. ஈழத் தமிழர்கள் தான் பாவம்! ஜெனிவா மகாநாடு தமக்கு வெற்றி என்று அரசு ஆர்ப்பரிக்கிறது. தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று என்பது அதன் எண்ணம்.

இருப்பினும், அமெரிக்க தீர்மானமும் சரி, மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையும் சரி, இலங்கையை நம்ப முடியா தென்பதை கோடிட்டுக் காட்டாமல் இல்லை. மனித உரிமைகள் ஆணையாளர் இனப்படுகொலையை விசாரிக்க இலங்கையின் நீதி நிருவாகப் பொறிமுறை உகந்தது அல்ல என்று சொல்லியிருக்க, இலங்கையைத் தட்டிக்கொடுப்பது போல பிரேரணை நிறைவேற்றிய அமெரிக்காவோ பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வல்லுநர்களோடுதான் விசாரணை நடைபெற வேண்டும் என்று மட்டுமல்ல, தொடர்ந்தேர்ச்சியாக அதன் முன்னேற்றம் குறித்தும், அதன் பரிந்துரைகள் குறித்தும், அவற்றின் அமுலாக்கங்கள் குறித்தும், தமிழர் பிரச்சினைக்கான தீர்வின் அமுலாக்கம் குறித்தும் வாய் மொழி அறிக்கைகள் வேளைக்கு வேளை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று நிபந்தனை போட்டுள்ளதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஆனாலும் ஏற்கனவே "நாங்கள் வென்று விட்டோம், பலரையும் தூக்குக் கயிற்றில் இருந்துகாத்து விட்டோம், யாரையும் காட்டிக் கொடுக்கமாட்டோம்' என்று பிரதமர் முதல் பாராளுமன்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் வரை மார் தட்டுவதையும் பார்க்கின்றோம். ஜனாதிபதி கூட உள்நாட்டு விசாரணைதான் அறுதியும், இறுதியுமானதென்கின்றார். அதாவது. குற்றம் புரியப்பட்டுள்ளதென்றும், அவர்களைக் காட்டிக் கொடுக்கமாட்டோம், சாகக் கொடுக்க மாட்டோம் என்றும் இவர்கள் சூளுரைக்கின்றார்கள். அதாவது அவர்கள் வெளிப்படையாக, குற்றங்கள் நடந்ததை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் தண்டிக்கின்ற அளவுக்குப் போகமாட்டோம் என்கிறார்கள். விசாரணைக்கு முன்னர் அதைச் சொல்லும் போது, எவருக்கு இத்தகைய விசாரணையில் நம்பிக்கை பிறக்கும்? இதனால்தான் சருவதேச விசாரணை வேண்டாம் என்கிறார்களா?

இருந்தும், விசாரணை என்பதை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசு இருக்கிறது. அதற்கு ஒப்புதலும் அளித்திருக்கிறது. இந்தவேளையில் உள்ளூர் நெருக்கடியிலிருந்து தப்பிக்க இந்தமாதிரி வாய்ச் சவடால்களை மேற்கொள்ளவும் வாய்ப்புக்கள் இருப்பதை நாம் கணக்கில் எடுக்கவும் வேண்டும். இன்னுமொரு புறம் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டு அமெரிக்கா சமாளிக்க முனைகிறதா என்றுமொரு சந்தேகம். பொதுநலவாய நாட்டு நீதிபதிகள், நிபுணர்கள் என்று தமிழர் தரப்பை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, நீசீனாவுக்கு இடம் கொடாதவரை, உள்ளூர் பொறிமுறை என்று போனாலும் நாங்கள் கண்டுகொள்ள மாட்டோம் என்று ஏற்பாடு பண்ணிக் கொண்டுள்ளதா? யாரறிவார்?

இந்த நேரத்தில் தமிழ்த் தலைமைத்துவம் 'வாய்ச் சொல்லில் வீரர்களாக இருந்துவிடாமல், குறைந்த பட்சம் விசாரணைப் பொறிமுறையின் ஒவ்வொரு கட்டம் பற்றியும், அவ்வப்போது அரச தலைவர்கள் வெளியிடும் கருத்துக்கள் பற்றியும் ஆதாரத்தோடு சர்வதேசத்தின் பார்வைக்கு கொண்டு வருவதில் முனைப்பாக இருக்க வேண்டும். பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தலையும், அதில் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய கதிரைகளையும் பற்றி கருத்தைக் குவித்து கணக்குப்போட்டு காரியத்தில் இறங்கினால் அதோகதியாகிவிடக்கூடிய சூழ்நிலை எழுந்தாலும் வியப்பதற்கில்லை.

## மரணத்தின் பின்...

பரலோகத்திலிருந்து தமக்காகச் செபித்தவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுவார்கள். கத்தோலிக்கர் இந்த உண்மையை நன்கு உணர்ந்தால் இறந்த ஆன்மாக்களுக்காகச் செபிப்பதில் கருத்தாயிருப்பார்கள்.

மக்கபேயர் 12ம் அதிகாரம் 42ம் திருவசனத்தில் இறந்தவர்களுக்காக வேண்டினர் என அறிகிறோம். 43ம் திருவசனம், "ஒவ்வொருவரிடமிருந்தும் யூதா பணம் திரட்டி ஆறு கிலோ வெள்ளி சேகரித்து, பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுக்கும்படி எருசலேமுக்கு அனுப்பிவைத்தார்" என்று உள்ளது. 45ம் திருவசனத்தில் இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக் கொடுத்தார்" என்று காணப்படுகின்றது. ஆகவே, நாம் இறப்பது நிச்சயம். உத்தரிப்பு ஸ்தலத்திற்குப் போய்த்தான் பரலோகம் செல்லமுடியும். நாம் தினந்தோறும் ஆத்துமாக்களின் இளைப்பாற்றிற்காகச் செபமாலை ஒப்புக்கொடுத்தால், இளைப்பாறிய ஆத்துமங்கள் பரலோகம் சென்றதும் அவர்களுக்காகச் செபித்தவர்களுக்காக இறைவனிடம் பரிந்துபேசுவார்கள். புனித கத்தரின், "புனிதர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றபோதும், அதைவிடப் பெரிய உதவிகளைத் தூய ஆன்மாக்களின் மூலமாகப் பெற்றுக்கொண்டேன்" என்கிறார்.



~ ஞானம் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

## க.பொ.த. சா/த மாணவர்களுக்கானது

போதகர் S. அருமைராஜா - Dip.in.Chr(India)

பகுதி - 02

**02)**

**03. இறைவனின் படைப்பாகிய நீர் சமூகத்திற்கு ஆற்றக்கூடிய செயற்பாடுகள் 5 தருக?**

- படைப்பைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல்.
- சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஆற்றல் திறன்களைப் பகிர்தல்.
- நட்புடன் ஒற்றுமையாக வாழ்தல்.
- அனைத்துப் படைப்புகளையும் மதித்தல்.
- சமூக நலன்களைப் பேணி வாழ்தல்.

**03)**

**01. போர்த்துக்கேய தூதுப் பணி நம் நாட்டில் வெற்றியடைந்ததற்கான பிரதான காரணிகள் எவை?**

- போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் இலங்கை மக்களோடு மிகவும் ஐக்கியமாக இருந்தனர்.
- நம் நாட்டுத் தாய் மொழிகளைக் கற்றுப் போதித்தனர்.
- கரையோரப் பகுதிகளில் தம் பணியை ஆரம்பித்தனர்.
- எல்லோரையும் சமமாக நடத்தினர்.
- எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.

**02. ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் அனுபவித்த துன்பங்களைத் தருக?**

- கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டனர்.
- ஒளிந்திருந்த கத்தோலிக்கக் குருக்கள் கண்டுபிடிக்கப்படும் பொழுது அவர்களுக்கு மரண தண்டனை வழங்கியமை
- கத்தோலிக்கர்களின் சொத்துகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டமை.
- ஒல்லாந்தரின் பாடசாலையில் கத்தோலிக்க சமயம் கற்பிக்கத் தடை செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு சீர்திருத்தச் சபையின் (கல்வினஸ்) புரட்டஸ்தாந்து சமயம் கற்பிக்கப்பட்டமை.
- புரட்டஸ்தாந்து சீர்திருத்தச் சபையில் திருமுழுக்குப் பெறாதோருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க மறுத்தமை.
- சீர்திருத்தச் சபையில் சேர்ந்தோருக்கு மட்டும் அரச பதவிகள் சலுகைகள் வழங்கப்பட்டன.

**03. கத்தோலிக்க விசுவாசத்திற்கு உயிரூட்டிய சபைகள்:**

- பிரான்சிஸ்கன் சபை.
- இயேசு சபை.
- டொமினிக்கன் சபை.
- அகுஸ்தினார் சபை.
- ஒறத்தோரியன் மறைபரப்பாளர்கள்.
- அமலமரித் தியாகிகள் சபை.
- டிலாஸ் அருட்சகோதரர்கள்.

**04)**

**01. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் மிக நெருங்கிய உறவு உள்ளதென்பதை வெளிப்படுத்தும் விவிலிய நிகழ்வு எது?**

இறைவன் உயிர்பெறுவாயாக என்று கட்டளையிட்டு மனிதனைப் படைக்கவில்லை. மாறாக, மனிதனது நாசிகளில் தமது மூச்சை ஊதி உயிர் கொடுத்தார். மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் மிக நெருங்கிய உறவு உள்ளதென்பதை இது வெளிப்படுத்துகிறது.

**02. விஞ்ஞானமும் கிறிஸ்தவ விசுவாசமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல விளக்குக.**

- மனிதன் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவன் என்று திருவிவிலியம் கூறுகிறது.
- மனித சரீரத்தில் 96வீதமான மூலகங்கள் உண்டென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.
- தூசி துகள்களிலும் 96 வீதமான மூலகங்கள் இருப்பதாக கூறுகின்றனர். ஆகவே, மனிதன் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான் என்பது தெளிவு.

**03. மனிதனைப் படைத்த கடவுள் தம்மை வெளிப்படுத்தும் முறையினைத் தருக?**

இறைவன் குலமுதுவர்கள், நடுவர்கள், அரசர்கள், இறைவாக்கினர் வழியாகத் தம்மை மக்களுக்குப் படிப்படியாகத் தாமே உயிருள்ள கடவுள் என்றும், உண்மைக் கடவுள் என்றும், பராமரிக்கும் தந்தை என்றும், நீதி நிறை நடுவர் என்றும் வெளிப்படுத்துகிறார்.

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு இனிப்புக் கடை. சிறுவருடன் வரும் பெற்றோரின் கதி அதோ கதிதான். அதை எடுப்பதா, இதை எடுப்பதா எனத் தாமும் குழம்பிப் பெற்றோரையும் திணறடிக்கும் இவர்களைப் பார்த்து இரசிக்கக் கோடிக் கண்கள் வேண்டும். வியாபாரிகளுக்கோ கொண்டாட்டம். பெற்றோருக்கோ திண்டாட்டம். இந்த ரீதியில் இக்கடையிலும் ஒரு சம்பவம். அதிசயமானதும் கூட என்றால் அது மிகையாகாது.

சிறுவன் பேவியன் தாய் மேரியுடன் கடைக்குள் வந்தான். உள்ளே வரும்போதே அவனது கண்கள் ஆலாய்ப் பறந்தது. எல்லா இனிப்புப் பண்டங்களையும் ஒன்று விடாமல் ஆராய்ந்தான். அவ்வேளையில் அந்தக் கொக்கோ கேக்கில் அவன் கவனம் பதிந்தது. அது அவனுக்கு மிக விருப்பமானது. சிறுவர்களைக் கவரவென விசேட விதமாக ஐசிங் பண்ணி கண்களையும், உள்ளத்தையும், ருசி உணர்வையும் கவரத்தக்க வகையிலே அது சுகந்த மணம் வீசக் கண்ணாடித் தட்டில் வீற்றிருந்தது. சிறுவன் பேவியன் மட்டும் விதிவிலக்கா என்ன? தன் சுட்டு விரலை நீட்டி அதைக் காட்டி வாங்கித் தரும்படி கேட்டான். உணவுக்காகப் பாண் வாங்கவெனப் புறப்பட்டபோது, அவளோடு வர அடம்பிடித்த பேவியனை அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். அவளது நிலை இப்போது தர்ம சங்கடமாகி விட்டது. வீட்டு ஏழ்மையை இவனிடம் எப்படி விளக்குவது? கையில் இருக்கும் பணத்தை ஆராய்ந்தாள். 'ம்.... எப்படியும் இவனுக்கு கேக் வாங்க மீதிப் பணம் போதாது' எனச் சிந்தித்தாள் மேரி. இப்போது பேவியன் தொந்தரவு செய்ய ஆரம்பித்து அழவும் தொடங்கிவிட்டான்.

கடைக்குள் நின்ற ஒிருவர் கவனம் இவன் பால் ஈர்க்கப்பட்டு இவர்களைப் பார்க்கத் தொடங்கவே மேரிக்கு வெட்கம் தாளவில்லை. பொது இடமாதலால் பேவியனை அதட்ட முடியவில்லை. திரும்பவும் பணத்தை எண்ணினாள். 'போதாதே'. ஆதங்கப்பட்டவளாகப் பேவியனையும், கேக்கையும், கடைக்காரனையும், பரிதாபமாகப் பார்த்தாள். பேவியனிடம் கெஞ்சினாள். அவனோ மிஞ்சினான். ஒருவாறு கஷ்டப்பட்டு, அழத் தொடங்கிய வனை அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள் மேரி.

"தம்பி" ஒரு குரல் அழைத்தது. இருவரும் நின்று திரும்பிப் பார்த்தனர். அந்தக் கடையில் நின்றிருந்த ஒரு இளைஞன்,

"இந்தாங்க நீங்க விருப்பப்பட்ட கேக்" என்று பேவியனை நோக்கிக் கேக்கை நீட்டினான். பேவியனது அழுகை திடீரென நின்றது. திரும்பிப் பார்த்தான். கண்கள் மகிழ்ச்சியும், ஆச்சரியமும் நிறைந்து பெரிதாகின. ஆனால், மனதில் பயம். முன்பின் தெரியாத ஒருவர் தருவதை உண்ணக்கூடாது. தன் தாயைப் பார்த்தான். தாய் அந்த இளைஞனிடம்,

"வேணாம் தம்பி. உங்களுக்கு வீண் செலவு. வேணாம்" என்றாள்.

"இல்லம்மா என்ட தம்பிபோலத்தானே இவனும்"

மேரி மீண்டும்,

"வேணாம் தம்பி" என்றாள். அவனும் சளைக்காமல்,

"அம்மா என்ட பேர் சாள்ஸ். இந்தக் கடையில பொறுப்பான வேலையில இருக்கிறன். எனக்கு எந்த நட்டமுமில்ல. வாங்கிக்கொள்ளுங்க. இவன் சிறுவன் தானே. அவனுக்கு உங்கட நிலம் தெரியாதே! வாங்கிக் குடுங்க" எனப் பண்ணிய தொந்தரவை 'இது என்ன தொல்லை' என நினைத்துக்கொண்டு பேவியனிடம் "வாங்கிக்கொள்" என்று கூறவே, அவன் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நன்றி தம்பி. பேவியன் மாமாவுக்கு நன்றி சொல்லு" என்று அவனையும் நன்றிசொல்ல வைத்து வீடு திரும்பினாள் மேரி.

மகிழ்வுடன் துள்ளிக் குதித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்த பேவியன், கேக் பெட்டியைச் சுற்றியிருந்த கடதாசியை அவசரமாகத் திறந்தான். அறைக்குள் இருந்து வெளியே வந்த அவன் தந்தை ஜேம்ஸ் பேவியனது மகிழ்ச்சியையும், அவனது செயலையும் இரசித்தவராக அவன் பிரித்த கடதாசியில் ஏதோ எழுதியிருப்பதை அவதானித்தார். அதையெடுத்துப் பார்த்தபோது, "நமது உதவி நமக்கே உதவும் சக்கரம்" என்ற வாக்கியம் அதில் கையால் எழுதப்பட்டி ருந்தது. மின்னல் அடித்ததுபோன்ற ஒரு உணர்வு. அவரது எண்ண அலைகள் பதினைந்து வருடங்களுக்குப் பின்னோக்கிச் சென்றது...

ஜேம்ஸ் இருபது வயது இளைஞனாக இருந்தவேளை அது. வெதுப்பகம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். பெரிய வருமானம் ஒன்றும் இல்லை. என்றாலும், அம்மா, அப்பாவுடன் ஒரே தங்கையும் வாழக் கூடுமானதாக இருந்தது. பெரிதாகப் படிப்பேதும் இல்லாததால் இதைத் தவிர வேறேதும் வேலை இல்லாத நிலை. எனவே, இதிலேயே ஒண்டிக்கொண்டான். இரவுகளில் மேலதிக வேலை செய்து வருமானத்தைப் பெருக்கிக்கொள்வான். அதுவும் எந்நேரமும் கிடைப்ப தில்லை. அவனிடம் இரக்க சுபாவம் நிறையவே இருந்தது. அவனது சிரித்த முகம், அன்பான உரையாடல் நல்ல பெயரைத் தந்திருந்தன. ஒருநாள் பாண்களைத் தட்டுடன் கொண்டுவந்து கண்ணாடிப் பெட்டிக்குள் அடுக்கிக்கொண்டிருந்த அவனது செவிகளை அடம் பிடித்தழும் சிறு குரலொலி ஈர்த்தது. சத்தம் வந்த திசை நோக்கிக் கண்கள் பார்த்தன. அங்கே ஒரு சிறுவன் அழுதுகொண்டு சிறுவர்க்கான சிறப்பு கொக்கோ கேக்கை வாங்கித் தரும்படிக் கையைக் காட்டித் தந்தையைத் தொந்தரவு பண்ணிக்கொண்டிருப்பதைக் கண்டார். தந்தையிடம் காசு இல்லை போலும். திரும்பத் திரும்பக் காசை எண்ணிப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கினார். பாணை மட்டும் வாங்கிக்கொண்டு சிறுவனைக் கஷ்டப்பட்டுச் சமாதானம் சொல்லிக் கொண்டு இழுக்காத குறையாக அழைத்துச் சென்றார்.

"தம்பி" எனும் குரல் கேட்கவே, இருவரும் திரும்பிப் பார்த்தனர். ஒரு இளைஞன் கையில் சிறுவன் விருப்பப்பட்ட கேக்குடன் நின்றான். அது ஜேம்ஸ் தான். சிறுவனது கண்கள் மகிழ்ச்சியால் அகல விரிந்தன. சிறுவனின் தந்தையைப் பார்த்து,

"ஐயா, இத வாங்கி உங்கட மகனுக்கு குடுங்க" என்றதும் அவர்,

"வேணாம், என்னட்ட காசில்ல" என்று தடுத்தார். ஜேம்சும் விடாது,

"நான் காசு கேக்கலியே. சிறுவன்.... அதுதான்" என்றதைக் கேட்ட அம்மனிதரோ,

"இல்ல தம்பி. இந்தப் பழக்கம் தொடந்தா இவன் கெட்டுப்போவான். வேணாம்" என்றவரை இடை மறித்த ஜேம்ஸ்,

"உங்கட தன்மானத்த பாராட்டத்தான் வேணும். ஆனா, இவன் என்ட தம்பியப்போல இருக்கிறான். அவன் காய்ச்சல் வந்து செத்து இண்டைக்கு ஒரு வருசம். இவனுக்கு இந்தக் கேக் எண்டா நல்ல விருப்பம் அதுதான். இப்ப எண்டாலும் இத வாங்கிறீங்களா?". கண்கள் பணிக்க அவன் கூறியதைக் கேட்டதும் உடைந்து போனார் அவர்.

"மன்னிச்சுக்கொள்ளுங்க தம்பி. சரி, நன்றி" என்று கூறிச் சிறுவனை வாங்கிக்கொள்ளும்படி சைகை காட்டினார். அவன் அதை வாங்கிக் கொண்டபோது, அவனது முகமலர்வை இரசித்தார் ஜேம்ஸ். அவர் அந்தக் கேக்கைச் சுற்றிய கடதாசியில் "நமது உதவி நமக்கே உதவும் சக்கரம்" என எழுதிக் கொடுத்தார்.

நனவுலகுக்கு மீண்டார் ஜேம்ஸ். இதோ! மறுபடியும் அதே வாக்கியம். அதுவும் தனது வீட்டுக்கே. இப்போது தன் மகனது கரங்களில். 15 வருடங்களின் பின் .... அவரது சிந்தனை வேகமாகச் செயற்பட்டது. ஆம், கண்டுபிடித்து விட்டார். அன்று தான் கேக் கொடுத்த சிறுவனே இன்று இதனைத் தன் மகனுக்குக் கொடுத் துள்ளான் என்பதும், தான் எழுதிய அந்த வாசகம் அவனை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளது என்பதும் இப்போது தெள்ளத் தெளிவானது. நிறைவான மனதுடன் மகிழ்ச்சியடைந்தார்.

– பாருமீன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலர் திராட்சையில் விட்டமின் “பி” மற்றும் சுண்ணாம்புச் சத்து அதிகம் நிறைந்துள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் உகந்ததுதான் இந்த உலர்ந்த திராட்சை. இது அதிக மருத்துவக் குணங்களைக் கொண்டது. “கிஸ்மிஸ் பழம்” என்று அழைக்கப்படும் உலர் திராட்சையில் உடலுக்கு வலிமை தரும் சத்துக்கள் நிறைந்துள்ளன.

திராட்சைப் பழ வகைகளிலேயே உயர்தரமான திராட்சைப் பழங்களைப் பதம் செய்து உலர்த்தி பெறப்படுவது தான் இந்த கிஸ்மிஸ் பழம். இதில் அதிக அளவு சுக்ரோஸ், ப்ரக்டோஸ் நிறைந்துள்ளது. மேலும், விட்டமின்களும், அமினோ அமிலங்களும் காணப்படுகின்றன. இதில் பொட்டாசியம், மெக்னீசியமும் காணப்படுவதால் அமிலத் தொந்தரவுகள் அதிகம் ஏற்படாது.

**இனி, உலர் திராட்சையின் பயன்கள்:**

* ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் உலர் திரட்சையை உட்கொண்டால் இரத்தசோகை குணமாகும். இதில் உள்ள சத்துக்கள் இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.
* மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினசரி இரு வேளை உலர் திராட்சையைச் சாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும்.
* உலர் திராட்சைப் பழத்தில் 50 பழங்களை எடுத்துச் சுத்தம் செய்து பசுப் பாலில் போட்டு காய்ச்சி ஆற வைத்து, பழத்தைச் சாப்பிட்டு விட்டுப் பாலை குடித்தால் காலையில் மலச்சிக்கல் பிரச்சினை சரியாகும்.
* இதில் உள்ள கல்சியச் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.
* குழந்தைக்குப் பால் காய்ச்சும் போதும் அதில் இரண்டு பழத்தை உடைத்துப் போட்டு காய்ச்சிய பின் பாலை வடிகட்டிக் கொடுத்தால் குழந்தை திடமாக வளரும்.
* தொண்டைக்கட்டு பிரச்சினை இருந்தால் இரவு படுக்கும் முன் 20 உலர் திராட்சைப் பழங்களைச் சுத்தம் செய்து, பசும்பாலில் போட்டுக் காய்ச்சி, 10 வால் மிளகைத் தூள் செய்து கொஞ்சம் பனங்கற்கண்டு சேர்த்துக் கலக்கிக் குடித்தால் விரைவில் தகுந்த நிவாரணம் பெறலாம்.
* மூல நோய் உள்ளவர்கள் தினசரி உணவுக்குப் பின்னர் காலையிலும், மாலையிலும் 25 உலர்திராட்சைப் பழங்களை தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வந்தால் குணம் பெறலாம்.

## மருத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் ½ மணி நேரம் ஊறவைத்துக் காலையில் அருந்தினால் பெண்க ளின் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும். மாதவிலக்கு சமயத்தில் வயிறு, மார்பு, விலா, முதுகுப் பக்கங்களில் வலி ஏற்படும். இதை நிறுத்த 20 பழங்களை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீரில் தேக்கரண்டியளவு சீரகம் சேர்த்துக் கசாயம் செய்து மூன்று நாட்களுக்கு இருவேளை சாப்பிட்டு வரலாம்.

**குழந்தைகள் வளர்ச்சிக்கு :**

வளரும் குழந்தைகளுக்கு ஏற்றபழம் இது. எலும்புகள் நன்றாக உறுதியாக வளரவும், பற்கள் வலுப்பெறவும் மற்றும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான சத்து கல்சியம்தான். கல்சியம் அதாவது சுண்ணாம்புச் சத்து இந்தப் பழத்தில் அதிகம் நிறைந்துள்ளது. இந்தப் பழத்தை இரவு உணவுக்குப் பிறகு 10 பழங்கள் வீதம் எடுத்து பாலில் போட்டுக் காய்ச்சிப் பாலையும், பழத்தையும் சாப்பிட்டு வந்தால் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், பலமாகவும் இருப்பார்கள்.

**இரத்த விருத்திக்கு :**

எலும்பு மச்சைகளிலிருந்து இரத்தம் ஊறுவதற்குக் காய்ந்த திராட்சை மிகவும் உதவுகிறது. இந்தப் பழத்தை எடுத்து வாயில் போட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாறு இறக்கினால் எலும்பு மச்சைகள் பலம டைந்து இரத்தம் அதிகம் சுரக்கும். மேலும் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி உடலுக்குப் புத்துணர்வைக் கொடுக்கும்.

**கர்ப்பிணிப் பெண்களுக்கு :**

கருவில் வளரும் குழந்தைக்குத் தேவையான அனைத்துச் சத்துகளும் தாயின் மூலம்தான் கிடைக்கும். தாயின் ஆரோக்கியமே முதலில் முக்கியம். அதனால் கர்ப்பிணிப் பெண்கள் உலர்ந்த திராட்சையைப் பாலில் கலந்து கொதிக்க வைத்துப் பருகி வந்தால் பிறக்கும் குழந்தை குறையில்லாமல் ஆரோக்கியமாக பிறக்கும்.

**மலச்சிக்கல் தீர :**

மலச்சிக்கலே நோய் வருவதற்கான அறிகுறியாகும். மலச்சிக்கலின்றி வாழ்ந்தால் நூறாண்டு நோயின்றி வாழலாம்.

வயது முதிர்ந்தவர்களுக்கு மலச்சிக்கல் வருவது இயற்கையே. இவர்களின் உடலில் ஜீரண உறுப்புகள் வலுவிழந்து இருப்பதால் உணவுகள் எளிதில் ஜீரணம் ஆகாது. இவர்கள் மலமிளக்கி மருந்துகளைச் சாப்பிட்டாலும் இந்தப் பிரச்சினை தீராது. இதனால் முட்டுவலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுப்பு வலி, தலைவலி எனப் பல உபாதைகள் உருவாகும்.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் அரு மருந்தாக இருப்பது உலர்ந்த திராட்சைகளே. தினமும் படுக்கைக்குச் செல்லுமுன் பாலில் இந்தப் பழங்களைச் சேர்த்துக் காய்ச்சி அருந்தி வந்தால் மலச்சிக்கல் தீரும்.

குடல்புண் ஆற :

அஜீரணக் கோளாறுகளால் குடலில் உள்ள வாய்வு சீற்றம் ஏற்பட்டு குடல் சுவற்றைப் புண்ணாக்கி விடுகின்றன. இவர்கள் உலர்ந்த திராட்சைப் பழங்களை நீரில் கொதிக்கவைத்துக் கசாயம் போல் செய்து அருந்தி வந்தால் குடல் புண்கள் குணமாகும்.

இதயத் துடிப்பு சீராக :

சிலருக்கு இதயம் மிக வேகமாகத் துடிக்கும். இவர்கள் எப்போதும் ஒருவிதமான பதட்டத்துடனே காணப்படுவார்கள். இவர்கள் பாலில் இந்தப் பழங்களைப் போட்டு காய்ச்சி ஆறிய பின் மறுபடியும் காய்ச்சி, பாலையும், பழத்தையும் சாப்பிட்டு வந்தால் இதயத் துடிப்புச் சீராகும்.

சுகமான நித்திரைக்கு :

தினமும் படுக்கைக்குச் செல்வதற்கு அரைமணி நேரம் முன்பு பாலில் நான்கு அல்லது 5 காய்ந்த திராட்சையைப் போட்டுக் கொதிக்க வைத்து வடி கட்டிப் பாலை அருந்தி வந்தால் சுகமான நித்திரை கிடைக்கும். தினமும் உலர்ந்த திராட்சையைச் சாப்பிட்டு நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வோம்.



# உலகெங்கும் மரியாளின் புகழ்... 07

## குவார்டா வியஹோவின் அமலோற்பவ அன்னை - குவாதமாலா



குவாதமாலா நகரில், ஜனவரி 6ம் திகதியன்று மூன்று ராஜாக்கள் திருநாளன்று கொண்டாடப்படும் கார்டா வியஹோ மாவட்ட திருவிழாவானது, அமலோற்பவ அன்னை திருவிழாவோடு தொடங்கி கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்புக்கால நிகழ்வுகளை நிறைவுசெய்கிறது. குவாதமாலா நகரில் இருக்கிற அமலோற்பவ அன்னையின் பல முக்கிய திருச்சிலைகளுக்குள் இங்குள்ள திருச்சிலையே மிகத் தொன்மையானதாக இருக்கக்கூடும். பிரான்சிஸ்கன் மூன்றாவது சபைக்குச் சொந்தமான இச்சிலை, 1800வது ஆண்டுகளில் கார்டா வியஹோவின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பிரான்சிஸ்கன் ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 'புனித ராஜாக்களின் கன்னிமரி' என்றும் அழைக்கப்படுகிற இத்திருச்சிலையானது, 2003 ஜனவரி 6ம் திகதியன்று குவாதமாலா பேராயரான மேதகு: கர்தினால் : கியுஸாடா டொருவியோ அவர்களால் ஒரு மாபெரும் திருச்சடங்கில் மீண்டும் அர்ச்சிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



இலங்கையின் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் ஆயராகப் பணி புரிந்த மேதகு: தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணி ஓய்வை, திருஅவைச் சட்டம் 401.1இன் படி ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புதிய ஆயராக அம் மறைமாவட்டத்தின் முதன் மைக் குரு அருட்தந்தை: ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரை, 2015 அக்டோபர் 13ம் திகதியன்று நியமித்துள்ளார். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு: ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இம் மறைமாவட்டத்தின் பதினோறாவது ஆயராகும். 1948 மே மாதம் 14ம் திகதி ஊர்காவற்துறை தூய மரியன்னை ஆலயப் பங்கில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் மற்றும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர். தனது இறையியல் கல்வியை 1972-1974 காலப் பகுதியில் இந்தியா, புனேபாப்பிறை குருத்துவக் கல்லூரியிலும், மெய்யியல் கல்வியைக் கண்டி, தேசிய குருத்துவக் கல்லூரியிலும் நிறைவுசெய்தவர். 1974ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் மறைந்த யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு: தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரின் முதல் குருத்துவப்பணி நியமனம் 1974ல் கிளிநொச்சி, வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது. 1975-1976 காலப் பகுதியில் உருத்திரபுரம் பணித் தளத்தில் பணியாற்றியதுடன், லோங் தொழில்நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தின் உதவி இயக்குநராகவும் பணியாற்றினார். 1976-1979 வரை இளவாலை புனித அன்னம்மாள் ஆலய உதவிப் பங்குத் தந்தையாகவும், 1980-1985 வரை மாரீசன் கூடல் பங்குத் தந்தையாகவும் பணியாற்றினார். இப்பணிகளுடன் 1976-1989 வரை இளவாலை, புனித ஹென்றி அரசர் கல்லூரியின் உப அதிபராகவும், 1989-2002 வரை அக்கல்லூரியின அதிபராகவும் பணியாற்றினார்.

இவர் அரச பாடசாலையிலிருந்து தனியார் பாடசாலைக்குப் பணி மாற்றம் பெற்று 2002 தொடக்கம்



## தொண்டன் வாசகர்களே!

இவ்வருடம் ஐப்பசி மாதம் முதல் தொண்டன் சஞ்சிகைக்கான தபாற்செலவு மும்மடங்காகியுள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம். இதன்படி ஒரு தொண்டன் பிரதியின் தபாற்செலவு ரூபா. **24** ஆகியுள்ளது. எனவே, 2016ம் வருடம் தை மாதம் தொடக்கம் ஒரு தொண்டன் பிரதிக்குரிய விலையை ரூபா. **50** ஆகவும், வருட கால சந்தாப் பணத்தை (~~600/=~~)ரூபா . **550** ஆகவும் உயர்த்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

**- நிர்வாகம் -**

**- ஜே. எச். இரத்தினராஜா -**



2007 வரை புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்தார். இங்கிலாந்தில் 1986 முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும், 1979 முதல் 1980 வரை முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்ற இவர் 1991ம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 தரத்தைப்பெற்று 1990-1994 காலப்பகுதியில் இளவாலையில் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் பணியாற்றியுள்ளார். 1994ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டு வரை இளவாலை மறைக்கோட்டத்தின் முதல்வராகப் பணியாற்றிய இவர் இதே காலப்பகுதியில் யாழ் மறைமாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவராகவும் பணியாற்றினார். பின்னர் அதே பணியை 2007 தொடக்கம் இற்றை வரையும் ஆற்றிக் கொண்டிருந்தார்.

இப் பணிகளுடன் 1982-1984 காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் விரிவுரையாளராகவும், 2003 தொடக்கம் யாழ் பல்கலைக்கழக ஒழுக்காற்றுச் சபைத் தலைவராகவும், 2002 தொடக்கம் யாழ் பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும், பரீட்சையாளராகவும் இன்று வரை கடமையாற்றுகின்றார்.

அருட்கலாநிதி: மேதகு: ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் 2007ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு ஆயர் நியமனத்தைப் பெறும்வரை எட்டு ஆண்டுகள் யாழ் மறைமாவட்டத்தின் குரு முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இப்பணிகளுடன் கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியுள்ளார். 67 வயது நிரம்பிய புதிய ஆயர் அருட்கலாநிதி: மேதகு: .ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களது பணி சிறக்க தொண்டன் இதழானது வாழ்த்துவதுடன், அதேவேளை 34 வருடங்கள் ஆயராகப் பணி புரிந்து தமது 77வது வயதில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும் தொடர்ந்து இறையாசிர் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது ஆயரின் இலண்டன் பயணம்



இலண்டன் மாநகரில் இயங்கிவரும் "தமிழ்க் கத்தோலிக்க ஒன்றியத்தின்" 28வது வருட பூர்த்தியினைச் சிறப்பிக்கும் நிகழ்விற்கு எமது மறைமாநில ஆயர் கலாநிதி: ஜோசப் பொன்னையா ஆண்டகை பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்நிகழ்வில் ஆயர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதும், அங்கிருந்த மக்களுடன் அவர்களின் பணிகள் குறித்து கலந்துரையாடியதும், அவர்கள் பணி சிறப்பாக அமைய வாழ்த்துகள் கூறியதும் இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

அத்தோடு இலண்டன் தொலைக்காட்சி நிறுவனமான "குளோபல் TV" சார்பாக மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஒன்றில் எமது ஆயர், இலங்கை நாட்டின் தற்போதைய நிலை பற்றியும் குறிப்பாக, மட்டக்களப்புப் பகுதியில் காணப்படக்கூடிய தற்போதைய நிலை பற்றியும் புதிதாக உருவாக்கப்பட்ட எம் மறைமாநிலம் பற்றியும் பல்வேறு கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட அர்ப்பண ஆண்டின் உத்தியோகபூர்வ நிறைவுநாள் கொண்டாட்டம்

சென்ற வருடம் கார்த்திகைத் திங்கள் கிறிஸ்து அரசர் திருவிழாவுடன் ஆரம்பமான அர்ப்பண ஆண்டு, 2015.10.24 சனிக்கிழமையன்று எமது மறைமாவட்ட ஆயர் கலாநிதி: ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற காலைத் திருப்பலியுடன் உத்தியோகபூர்வமாக நிறைவிற்குக் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து, புனித சிசிலியா மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று, மதிய உணவுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன.

இந்நிகழ்வுகளில் குருக்கள், மற்றும் மறை மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு சபைகளைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளும், மறைமாவட்டத்தின் பங்குகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தது.







## சரியான பதிலடி

சர்ச்சில் தமது அரசியல் வாழ்வில் சந்தித்த சோதனைகளையும் வேதனைகளையும் பற்றி ஒரு நாள் பாராளுமன்றத்தில் விவரித்துக்கொண்டிருந்தார். அப்போது ஓர் உறுப்பினர் எழுந்து, "உங்கள் அனுபவங்கள் மூடர்களுக்குத்தான் பாடம் புகட்டுவதாக இருக்கும்" என்று கூறினார். உடனே சர்ச்சில், "நண்பரே! உங்களுக்கும் என் அனுபவம் பயன்படும் என்றல்லவா நான் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.



## சுதந்திரம்

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாய் இருந்த லாயிட் ஜார்ஸ் அனைத்து நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டு மென்று பேசினார்.



அவரைக் கேலி செய்ய எண்ணிய ஒருவன், "நரகத்திற்கும் சுதந்திரம் வேண்டுமா...?" என்று கத்தினான்.

"ஆமாம்! இப்படி ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களுடைய நாட்டுக்காகப் பரிந்துபேச வேண்டும். அப்போதுதான் சுதந்திரம் சாத்தியமாகும்" என்று சொன்னார். அவரைக் கேலி செய்தவன் அவமானப்பட்டு தலை கவிழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனிதர்களை அறிவோம்...!

கார்த்திகை – 2015

- மற்றில்டா இராஜேந்திரம் -

**கார்த்திகை 8ந் திகதி : புனித கொட்பிறி :**



1065ம் வருடத்தில் பிரான்ஸ் நாட்டுச் சொய்சன்ஸ் எனும் இடத்திற்கருகில் பிறந்தார். குருவாகிய பின், சம்பேனில் இருந்த நோஜன்டில் இருந்த துறவியர் இல்லத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அந்த இல்லத்தின் நிலைமை அவ்வளவு திருப்தியானதாக இருக்கவில்லை. அங்கத்தவர் குறைவது தீவிரமாகக் காணப்பட்டது. அத்துடன் வெளித் தோற்றமும் முற்றாகப் பாழடைந்து இருந்தது. ஆன்மீக வாழ்வு ஒழுங்கற்று மிகக் கஷ்டமான நிலை காணப்பட்டது. இந்த நிலையில் கோட்பிறியின் ஆளுமையினாலும், ஆன்மீகத்தினாலும் மிக விரைவில் அதே இல்லம் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வந்தது. றெய்ம்ஸில் வசித்த செயின்ற் றெமியின் மகா அபேசியிடம் ஒப்படைத்ததன் பயனாக இவரது சொந்த வீட்டைக் கொண்டு நடத்தப் போதுமான உதவி கிடைத்தது. 1104ம் வருடத்தில் ஏமியன்சிலிருந்த குருக்களை வழிநடத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். தனது நிர்வாகத்தை மிகத் திறம்பட நடத்தியமை இவரை ஒரு உண்மைத் துறவியாகக் காண்பித்தது. பரிசுத்த பண்டங்களை விற்பதற்கு முற்றுப் புள்ளி வைத்தார். கட்டாயப்படுத்தப்பட்ட கடுமையான பிரம்மச்சரியத்தையும் தடுத்ததுடன், ஒரு ஆட்சிப் பிரிவையும் உருவாக்கிய ஆரம்ப கர்த்தாவும் ஆனார். இவரது வளையாத, கண்டிப்பான, கடுமையான, நேரிய மனோபாவம் ஒரு சிலரின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வைக்கவே அதன் காரணமாகக் காத்தூசியன் மடாலயமொன்றுக்கு 1114ம் வருடத்தில் செல்ல வைத்தது. பின் இவரை அவருடைய மறைமாவட்டத்திற்கே திரும்பிவரச் செய்தனர். 1115ம் வருடம் சொய்சன்சில் இருந்த புனித கிறிஸ்பின் மடாலயத்தில் மரணத்தைத் தழுவினார்.

**கார்த்திகை 22ந் திகதி : புனித சிசிலியா:**



உரோமை நகரில் இவர் பிறந்தார். சிறுவயதினிலேயே தன் கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பணமாக்கித் தூய்மை வாழ்வை மேற்கொண்டு வந்தார். ஆனால், இவர் பெற்றாரோ வலேரியன் என்ற பெயருடைய ஒரு பிரபுவைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்துவைத்தனர். இவரோ, தன் கணவரைக் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்கும்படி மனமாற்றம் பெறச் செய்தார். கடவுள் அருளால் தனது கற்பைக் காத்துக்கொண்டார். அத்துடன் வலேரியனுடைய சகோதரன் டிபேட்டசையும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வைத்தார். இந்தச் சகோதரர்கள் இருவரும் வேதகலாபனையின்போது விசுவாசத்தை மறுக்கும்படி வதைக்கப்பட்டனர். இவர்களைப் போலவே சில நாட்களுக்குப் பின் விசுவாசத்திற்காக வாதைபட்டு மகிமையான மரணத்தைத் தழுவிக்கொண்டார் சிசிலியா. 161ம் வருடத்திற்கும் 192ம் வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்தில்-ஆட்சி செய்த மார்க்கஸ் ஓர்லியஸ் என்பவனின் காலத்தில் இச்சம்பவங்கள் நடைபெற்றன. புனித சிசிலியாவின் நாமம் திருச்சபையால் எப்போதும் புகழ்மிக்கதாகப் போற்றப்பட்டு வருகிறது. அத்துடன் திருப்பலியில்கூட இவரது பெயர் குறிப்பிடப்படுகின்றது. மேலும், திருச்சபை இவரை ஆலயங்களின் சங்கீதத்திற்குப் பாதுகாவலியாக்கியுள்ளது. அதாவது பாடகர் குழாமின் பாதுகாவலியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மாணவர் தினம்

நவம்பர் – 17

"மாணவர் மண்ணின் விதையாம் உணர்ந்தார்
வானத்திற் கொப்ப வளர்வார்"
குறள் கவிதை இவ்வாறு கூறுகிறது.

மாணவர் ஒவ்வொருவரும் தாம் விதைகளாக இருந்து விருட்சங்களாகி பெரிய, வல்ல செயல்களை உலகில் உருவாக்க வல்லவர்கள் என உணர்ந்து தம் கல்வியில் கவனஞ் செலுத்தினால் வானளவு புகழைப் பெற்று உயர்வடைவர் என்பது இதன் பொருளாகும்.

அனைத்துலக மாணவர் நாள் *(International Student's Day)* என்பது மாணவர் எழுச்சியை உலக ரீதியில் நினைவூட்ட ஆண்டுதோறும் நவம்பர் 17ஆம் திகதியன்று இடம்பெறும் நிகழ்வாகும்.
முதலில் இந்தச் சர்வதேச மாணவர் தினம் உருவாகிய வரலாற்றைப் பார்ப்போம்.

செக்கொசிலவாக்கியாவின் தலைநகர் பிராக்கில் சார்ள்ஸ் பல்கலைக்கழகத்தில் மாணவர் போராட்டம் 1939ஆம் ஆண்டு நவம்பர் 17இல் நடந்தது. நாஜிப் படையினரால் போராட்டம் நசுக்கப்பட்டதோடு 10 மாணவர்கள் தூக்கிலிடப் பட்டனர். அத்துடன், செக்கொசிலவாக்கியா ஆக்கிரமிப்புக்குள் ளானது. இந்த மாணவர்களின் எழுச்சியைச் சர்வதேச அளவில் நினைவூட்ட ஆண்டுதோறும் நவம்பர் 17 அன்று சர்வதேச மாணவர் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாள் முதன் முதலில் 1941 ஆம் ஆண்டு அனைத்துலக மாணவர் அமைப்பினால் இலண்டனில் கொண்டா டப்பட்டது. இவ்வமைப்பில் அப்போது அகதிகளாக இடம் பெயர்ந்த மாணவர்கள் அங்கத்தவர்களாயிருந்தனர். இந் நிகழ்வை ஐக்கிய நாடுகள் அவை அங்கீகரிக்க ஐரோப்பாவின் தேசிய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் ஊடாக இந்த மாணவர் அமைப்பு அழுத்தம் கொடுத்தது.

இன்றைய கல்வி, நாளைய உலகினை ஒளிமயமாக்க வல்லது என உலகம் எதிர்பார்க்கும் இவ்வேளை யில், இன்றைய மாணவர் தம் பொறுப்பினை உணர்ந்து செயற்படவேண்டும். கல்வியை இடைநடுவில் நிறுத்துவதை நினைத்தும் பார்க்காது, கடமையே கண்ணாகச் செயற்பட வேண்டியவர்கள் மாணவர்கள். தமது வாழ்விலும் கல்வி மகத்தான பங்கை வகிக்கிறது என்பதை உணரவேண்டும். கல்வி கற்றவரின் சிறப்பும், மதிப்பும் வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. இதனால்தான் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூட கல்விக்கென

→





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்திப்போமா....? மீண்டும் சந்திப்போமா....?

— ஜெ. சிதம்பரி —

கண்ணீரின் கதை சொல்லும் கார்த்திகையில்
கல்லறையைச் சந்திப்போம் சிறிதுவேளை
மண்ணினுள்ளே மறைந்துவிட்ட மாந்தர் நிலை
மனதினிலே சிந்திப்போம், மாநிலத்தில்
எண்ணரிய அன்புதந்த எம்முறவோர்
எமைநோக்கி இரங்கியே ஏங்குநிலை
வெண்மைபொதி கல்லறைகள் விளக்குமன்றோ
வெளியில் பொறி வாசகமும் உரைக்குமன்றோ ....

அன்புடை நல் அன்னைதந்தை எம்மை நோக்கி
அன்பு மகளாய் உன்னை அரவணைத்தோம்
இன்றெம்மை நீ மறந்ததேனோ? – என்பார்
இனிய நல்ல சோதரமும் கதறிநொந்து
துன்பந்தரும் அக்கினியில் துடிக்கின்றோமே
துயர்துடைக்க மாட்டாயோ? என்று கேட்பார்
என்புருகு வேதனையில் தவித்து நிற்கும்
எம்மயலார் தோழியரும் இரந்து நிற்பார்

உலகினிலே வாழ்ந்தகாலை உள்ளன்போடே
உதவிகள் நாம் அளித்ததுமுன் உள்ளத்தினின்று
விலகியதும் விந்தையன்றோ, விரைந்தே எங்கள்
வேதனையைத் தீர்த்திடவே வழி செய்யாயோ....?
பலனளிக்கும் பலிபூசை தான தருமம்
பக்தியுறு சிறுசெபங்கள் புரிந்து செய்தே
இலங்கு நல்ல மோட்ச வீட்டில் சேர்த்திடாயோ
"என்றென்றும் உன் உதவி மறவோம்" என்பார்

மீண்டுமந்த கல்லறைகள் என்ன சொல்லும்
மீளவொண்ணா மரணமென்ற அரக்கனுன்னைத்
தீண்டிடுவான் ஓர்நாளில் நீயுமிங்கே
துயின்றிடுவாய் துன்பமிலா வாழ்வு வேண்டில்
ஈண்டிருக்கும் போதினிலே ஈசனுடன்
இணைந்து வாழ்வாய் என்றெம்மை இடித்துக்கூறும்
மீண்டும் மீண்டுஞ் சந்திப்போம் கல்லறையை
மீட்சிபெறச் சிந்திப்போம் சிறுவேளை.



ஒரு அதிகாரத்தையே உருவாக்கிப் பத்துக் குறள்களால் அணி செய்துள்ளார். அரசர்களுக்குக் கூட தன்நாட்டில் மட்டுந்தான் சிறப்பு. ஆனால்,

"கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது ஔவைப் பாட்டியாரின் கருத்துரையாகும்.

எனவே, இத்தகைய பல சிறப்புகளையுடைய கல்வியைக் கற்கும் மாணவர் எந்நாட்டிலும் சிறப்பிக்கப்பட வேண்டியவர்களென்பதில் ஐயத்திற்கிடமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பார்வை

## நான்கு வேதங்கள், பகவத்கீதை இயேசுவின் தியாகம்

- அருட்சகோ. கலாநிதி S.A.I. மத்தியூ -

உபநிடதங்கள் என்பவை உலகிலே அதிக செல்வாக்குச் செலுத்தும் பணிக்கப்பட்ட பணிகளாகும். புதிதாக உருவாகிய பணிகளாகும். இன்றைய இந்து சமயத்தைப் புத்தாக்கம் செய்ய அது எடுத்த முயற்சிகள் பல. வேறு சமயங்களினது தாக்கங்களும் அது திடம் பெறவும், வளர்ச்சியடையவும் வழிவகுத்தன. தென் ஆசிய சமயங்களும் புத்த சமயமும் முக்கியமானவை.



இங்கு கூறிய சமயங்கள் தங்களுக்குரிய தத்துவத்தை உள்ளடக்கி உள்ளன. ஆசிய சமயக் கலாசார உலகத்தில் ஏறத்தாழ அரைவாசி மக்கள் உபநிடதத்தால் கவரப்பட்டுள்ளனர்.

உபநிடதம் என்ற வார்த்தை 'அருகிலே இரு' என்பதாகும். *(Esoteric)* உபநிடதம் கால மாற்றங்களுக்கு ஏற்ப படிப்பினைகளைத் தருகின்றது. ஒரு மேலான ஆசிரியன் தன்னைத் தானே புதுப்பித்த ஆன்மீகவாதி ஆகின்றான். ஒருவன் தன் குடும்பத்தை விட்டுப் பிரியப்போகிறான். அவனின் ஒரு மனைவி தன் செல்வத்தை இழக்க விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அறிவைக் கேட்க விரும்புகிறார். ஒரு இளைஞன் தன் தகப்பனைக் கோபத்துடன் பார்க்கின்றான். அவன் கடவுளிடம் மறுவாழ்வு பற்றி வினவுகிறான். ஒரு அரசனும் ஆண்டியாகப் போகிறவர்களிடம் விளக்கம் கேட்க அனுமதித்தார். ஆனால், இவற்றிற்கெல்லாம் சந்நியாசியாகப் போகின்றவன் நலிந்துவிடவில்லை. அவன் பயத்தை வெல்லச் செல்கிறான். கவலை மறக்கச் செல்கின்றான். மிகப் பெரிய திரவியத்தைத் தேடிச் செல்கிறான்.

இயேசு ஒரு தத்துவத்தைக் கூறினார். மக்களுக்கு அது புரியவில்லை, அறிஞர்களுக்குப் புரியவில்லை. சட்ட வல்லுநர்களுக்குப் புரியவில்லை.

'ஒருவன் ஒரு நிலத்தில் திரவியத்தைக் கண்டுகொண்டான். அதை அடையத் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் விற்று அந்நிலத்தை வாங்கினான்' இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இந்தத் தத்துவத்தைத்தான் மேற்கூறிய சட்டவல்லுநர்கள் அறியவில்லை. இதனால், இயேசுநாதர் கண்ணிருந்தும் குருடர்கள் என்றார். காதிருந்தும் செவிடர்கள் என்றார். ஒரு மேலான சந்நியாச வாழ்க்கையைத் தான் இயேசு குறிப்பிடுகின்றார். இந்த உலகில் பல துறைகள், கடமைகள் இருக்கின்றன. அவற்றைச் சரிவரச் செய்வதன் மூலம் அவன் பாக்கியவானாகின்றான். ஆனால். அந்தத் திரவியங்களை எல்லாம் விற்றுப் பெரிய புதிய நிலத்தைப் பெற்றால் அது தரும் பலன்கள் ஏராளம். இது இயேசு தரும் முக்தியை ஒட்டிய சந்நியாசமாகும். இந்து சந்நியாசி தனது குடும்பம், தனது பிள்ளைகள் யாவருக்கும் செய்யவேண்டிய சேவைகளைச் செய்தபின், நாடு துறந்து காட்டிற்குச் செல்கிறான். தியானத்தில் ஈடுபடுகின்றான். ஆச்சிரமங்களை நீர் வசதியான இடங்களில் அமைக்கின்றனர். சில சந்நியாசிகள் ஊருக்குள்ளும் வந்து உபதேசம் செய்கின்றனர். இவர்களுள் சிலர் முக்காலமும் உணர்ந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீராக் நூலிலிருந்து ...

"உன் பழைய நண்பர்களைக் கைவிடாதே; புதிய நண்பர்கள் அவர்களுக்கு இணையாகமாட்டார்கள்; புதிய நண்பர்கள் புதிய மதுவைப் போன்றவர்கள். நாள் ஆக ஆகத்தான் அதை நீ சுவைத்துக் களிப்பாய்"

9:10

இயேசு சிலுவையடியில் மாதாவைப் பார்க்கிறார். தன் தாயைப் பார்க்கிறார். இதைப் பற்றிய இரண்டு சம்பவங்கள் உள்ளன. ஏற்கெனவே, அவர் போதித்துக் கொண்டிருந்தபோது சூழ்ந்திருந்தவர்கள் "உம் தாயாரும் சகோதரர்களும் உம்மைக் காண வந்துள்ளனர்" என அறிவித்தனர். இயேசு அந்த வருகையை விரும்பவில்லை. சிலுவையடியில் "அம்மா நீ என்னதான் புலம்பினாலும் நான் உன்னோடிருக்க முடியாது. நான் சந்நியாசத்தை அடைந்துவிட்டேன். இதோ நிற்கும் என் சீடனே உன் மகன். அவனை ஏற்றுக்கொள்; எல்லோரையும் உம் மகனான ஏற்றுக்கொள்" என்றும், சீடனிடம், "இவளே உன் தாய். இவளை நீ உன் தாயாக ஏற்றுக்கொள்" என்று கூறித் தனது பற்றற்ற நிலையைத் தெளிவுபடுத்தினார். மரணத்தின் பிறகு உயிர் துறந்த இயேசு மீண்டும் நாற்பது நாட்கள் போதித்து விடைபெறுகிறார். விண்ணகம் நோக்கி நாம் அவரது இரண்டாவது வருகையை எதிர்பார்க்கின்றோம்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் எனும் நால் வேதங்களினதும் அனுசரணைகளை யும் செய்வதை இயேசு தன் வாழ்க்கையில் காட்டினார். இந்தச் செய்திகளையே பல்வேறு சடங்குகளாகத் திருச்சபை அங்கீகரித்து ஆதரவு தருகின்றது. இந்துக்கள், பௌத்தர்கள் தங்களது சமயங்களில் பல சடங்குகளையும் அனுட்டானங்களையும் செய்கின்றனர்.

மேலும், பகவானுடைய கீதை மகா பாரதத்திலே இத்தத்துவத்தை உள்ளடக்கி விதைக்கப்பட்டுள்ளது. இங்கு ஆசிரியனாகக் கிருஷ்ணரும், மாணவராக அர்ச்சுனரும் காணப்படுகின்றனர்.


உபநிடதம் என்பது வேதங்களின் அந்தம். எனவே, வேதாந்தம் என மருவி ஒலிக்கிறது. கிறிஸ்தவத்தின் இன்னொரு பெயர் வேதம். இது வேதாந்தத்திலிருந்து வந்தது.

திருவிவிலியத்தில் முதல் நூலில் கடவுள் மனிதனைப் படைத்தார். அன்பு காட்டும் கடவுள். அவனுடன் உரையாடும் கடவுள். தப்பு செய்தபோது தண்டனை விதித்தார். நீ ஞானியாக இருக்கவேண்டுமென்றால் நிர்வாணமாக இரு. மனதால் நிர்வாணமாக இரு. சமண சுவாமிகள் சால்வையுடன் திரிந்தனர். ஒன்றுமில்லாமையைக் காட்டினர்.

இறுதியாகக் கூறப்படும் ஐந்து நூல்களில் இணைச் சட்டங்கள் மனிதனின் பல்வேறு கூறுகளையும், இயலாமையையும், ஒழுக்கத்தை யும் வலியுறுத்துகின்றது.

இதனையே இந்துப் பெண்கள், இளம் பெண்கள் நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்றும், உலகம் பற்றி அறியவேண்டும் என்றும் மார்கழி மாதத்தில் அதிகாலையில் தெருவெங்கும் இசைபாடி மற்றவர்களையும்இருளிலிருந்து எழுப்பி வேதம் ஓதுகின்றனர்.

உபநிடதத்தில் முதலாவது உபநிடதமாகக் கூறப்படுவது கதோப உபநிடதமாகும். அதன் மற்றொரு பெயரையும் தந்துள்ளனர். அதுவே, ஈசா உபநிடதமாகும். 'ஈசா' என்பது இயேசுவைக் குறிக்கும். இயேசு இந்தியாவிற்கு வந்தாரா இல்லையா? என்பதுதான் கேள்வி. நேரே பார்க்கவில்லை என்பதுதான் வாதம். இயேசு பழைய உண்மைக்குப் புதிய கோட்பாட்டினை உருவாக்கினார். இதனால் புதிய கட்டளையை நான் தருகிறேன் என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அவைச் செய்திகள்

இவ்வுலகம் பணம் படைத்தவர்களுக்கு மட்டும் அல்ல, மாறாக, அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள ஓர் அழகிய கொடை என்ற உண்மையை, நமது அடுத்தத் தலைமுறைக்கு உணர்த்துவது நம் தலை முறைக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு தார்மீகக் கடமை என்று அகில உலக கரித்தாஸ் அமைப்பின் தலைவர், கர்தினால் லூயிஸ் அந்தோனி தாக்லே கூறினார்.

■

படைப்பைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஆசியத் திருஅவைகள் முன்னிலை வகிக்குமாறு வலியுறுத்தியுள்ளார் மியான்மார் கர்தினால் சார்லஸ் மாங் போ.

■

புனித பூமியின் திருத்தலங்களுக்குத் திருப்பயணிகள் வரவில்லையெனில், அங்கு 30 விழுக்காடு மக்கள் வேலையிழப்பதுடன், அவர்கள் வேறு நாடுகளைத் தேடி வெளியேற வேண்டிய நிலை உருவாகும். ஆகவே, புனித பூமிக் கிறிஸ்தவர்களுக்கு உதவ நினைக்கும் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்கள் திருப்பயணம் மேற்கொள்வது சிறப்பு என்கிறார் அப்பகுதியின் ஆயர் ஜியாசிந்தோ பவுலோஸ் மார்க்குஸ்ஸோ.


இரு சமூகவியலாளர்கள் வெளியிட்டுள்ள ஆய்வின்படி, 1980ம் ஆண்டில் சீனாவில் ஒரு கோடியாக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டில் பத்து கோ–டியாக இருந்தது எனவும், இவ்வுயர்வைப் பார்க்கும்போது அந்நாட்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஏழு விழுக்காடு வீதம் அதிகரித்துவருகின்றது என்றும் தெரியவருகின்றது.

பொலிவியா நாட்டின் பெயர் போன சான்டா க்ரூஸ் – பாமசோலா சிறையின் தரத்தை உயர்த்துமாறு, அந்நாட்டிற்கு மேற்கொண்ட திருப்பயணத்தின் போது திருத்தந்தை கேட்டுக்கொண்டதன் பேரில், அச்சிறையின் தரத்தை மேம்படுத்த முன்வந்துள்ளனர் அரசு அதிகாரிகள். ■

■ ■

2.75 கோடி மக்கள் தொகையைக் கொண்ட நேபாளத்தில், 7200 கத்தோலிக்கர்களே வாழ்கின்றனர்.

இறையரசைக் கட்டியெழுப்புவதில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வரும் நேபாளக் கிறிஸ்தவர்கள், சித்ரவதைகளை எதிர்ப்பதிலும், இறையரசைக் கட்டியெழுப்புவதிலும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார் நேபாள மறைப்பணி நிர்வாகி ஆயர்: பால் சிம்மிக்.



■ ■ ■

நம்மோடு வாழும் நம் சகோதர சகோதரிகளின் அன்றாட வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு நாமும், நம் கருணையும், நம் அன்பான தொடுதலும் அவசியமாக இருக்கும்போது நாம் வசதியாக வாழ்ந்துகொண்டிருக்க இயலாது என்று வத்திக்கான் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் கூறினார்.

கிழக்குத் திமோரில் கத்தோலிக்கத் திருஅவைக்கு சட்டமுறைப்படி அங்கீகாரமளிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஒன்றில், வத்திக்கானும் அந்நாட்டு அரசும் கையெழுத்திட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்

# திருவிவிலியம் கற்போம் – 149

முடிவுத் திகதி 30.11.2015

## நீதித் தலைவர்கள் – அதிகாரம் – 10: 1–18

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. அபிமலேக்கிற்குப் பின் இஸ்ரயேலை விடுவிக்கத் தோதுவின் புதல்வன் பூவாவின் மகனான, எப்ராயிம் மலையில் வாழ்ந்த இசக்கார் குலத்தைச் சார்ந்த ........................ எழுந்தார்.

   அ) தோலா    ஆ) அபிமலேக்கு    இ) தோது

2. சாமீரில் வாழ்ந்து வந்த தோலா இஸ்ரயேல் மக்களுக்கு இருபத்து மூன்று ஆண்டுகள் நீதித்தலைவராக விளங்கி, பின்னர் இறந்து ........................ அடக்கம் செய்யப்பட்டார்.

   அ) இஸ்ரயேலில்    ஆ) சாமீரில்    இ) காமோனில்

3. தோலாவுக்குப் பின் ........................ சேர்ந்த யாயீர் 22 ஆண்டுகள் நீதித் தலைவராக இருந்தபோது இவரது முப்பது புதல்வர் முப்பது கோவேறு கழுதைகளில் சவாரி செய்தனர்.

   அ) இசக்காரை    ஆ) யூதாவை    இ) கிலயாத்தை

4. யாயீரின் முப்பது புதல்வருக்குக் கிலயாது நிலப்பகுதியில் இருந்த முப்பது நகர்களும் இன்றுவரை ........................ என்று அழைக்கப்படுகின்றன. யாயீர் இறந்து காமோனில் அடக்கம் செய்யப்பட்டார்.

   அ) முப்பது யாயிர்    ஆ) அவ்வோத்து முப்பது    இ) அவ்வோத்து யாயிர்

5. இஸ்ரயேல் மக்கள் மீண்டும் பாகால்களுக்கும், அஸ்தரோத்துகளுக்கும் சிரியா, சீதோன், மோவாப், அம்மோனியர், பெலிஸ்தியரின் தெய்வங்களுக்கும் ஊழியம் செய்ததால் ........................ சினம் அவர்களுக்கெதிராக மூண்டது.

   அ) ஆண்டவரின்    ஆ) யாயீரின்    இ) தோலாவின்

6. இஸ்ரயேலரை ஆண்டவர் பெலிஸ்தியர், அம்மோனியரின் கையில் ஒப்படைக்கவே, அந்த ஆண்டு அவர்களைத் துன்புறுத்தியதுடன் ........................ அப்பால் கிலயாதில் இருந்த மக்களை 18 ஆண்டுகள் துன்புறுத்தினர்.

   அ) கலிலேயக் கடலுக்கு    ஆ) யோர்தானுக்கு    இ) சாக்கடலுக்கு

7. யூதாவுடனும், பென்யமினுடனும், எப்ராயிம் வீட்டுடனும் போரிட ........................ யோர்தானைக் கடந்து வந்தபோது இஸ்ரயேலர் மிகவும் அல்லலுற்று ஆண்டவரிடம் கூக்குரலிட்டனர்.

   அ) பெலிஸ்தியர்    ஆ) மோவாப்பியர்    இ) அம்மோனியர்

8. "உமக்கெதிராகப் பாவம் செய்தோம். ஏனெனில் நாங்கள் எங்கள் கடவுளாகிய உம்மை விட்டு விலகி ........................ ஊழியம் புரிந்தோம்" என்று இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரிடம் கூக்குரலிட்டனர்.

   அ) பாகாலுக்கு    ஆ) அஸ்தரோத்துக்கு    இ) சிரியா தெய்வத்துக்கு

9. ஆண்டவர் இஸ்ரயேலரிடம் "எகிப்தியர், எமோரியர், அம்மோனியர், ........................ இடமிருந்து நான் உங்களை விடுவிக்கவில்லையா? சீதோனியர், அமலேக்கியர், மாகோனியரிடமிருந்தும் உங்களை விடுவிக்கவில்லையா?" என்றார்.

   அ) இப்தானியர்    ஆ) பெலிஸ்தியர்    இ) சிரியாவினர்

10. இஸ்ரயேலர் ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டி ஆண்டவருக்கு ஊழியம் புரிய, ஆண்டவர் இஸ்ரயேல் ........................ துன்பம் குறித்து வருத்தமுற்றார்.

   அ) எதிரிகளின்    ஆ) தலைவர்களின்    இ) மக்களின்

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் –149

பரிசுப் போட்டி

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)




1. வில்பர்ட் ரைட், ஆர்வில் ரைட் சகோதரர்கள்
தமது முதலாவது விமானத்தைப் பறக்கச் செய்த இடம் :
(கரோலினா - அமெரிக்கா - கிட்டிகொக்)

2. 1864ல் போரில் காயமுற்ற போர்வீரர் மட்டில் அக்கறை
காட்டும் பிரகடனம் உருவான மகாநாடு கூடியது :
(சன்பிரான்சிஸ்கோவில் - ஜெனிவாவில் - பெர்லினில்)

3. 1505ல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்திறங்கியபோது தலைநகர் கோட்டையின்
சிங்கள மன்னன் :
(9ம் பராக்கிரமபாகு - 6ம் புவனேகபாகு - 2ம் பராக்கிரமபாகு)

4. 1973ம் ஆண்டிலிருந்து பயன்பட்டாலும் தொடர்பாடல் செய்மதி, இணையம் வந்தபின்பே
அதி வளர்ச்சி கண்ட ஊடகம் :
(மின்னஞ்சல் - தொலைநகல் - டெலிபெக்ஸ்)

5. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் ..............'
(நகரும் - விலகும் - உடையும்)

6. நாற்சதுரமாகவோ, நீள் சதுரமாகவோ அமைந்துள்ள மண்வெட்டி :
(கேட்டி - கோல் - பிக்கான்)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 149**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 147 விடைகள்

வாக்குவாதம், கிதியோன், சுக்கோத்து, இடித்துத் தள்ளுவேன், நோபாவுக்கும், பெனுவேலின், செபாகிடமும், என் மகனும், தொங்கணிகள், இஸ்ரயேல்

## அறிவை வளர்ப்போம் - 147 விடைகள்

1. 1948
2. 2006
3. இயேசுசபையினர்
4. நீர்த்துப்போகச் செய்யும்
5. கொட்டும்
6. வினைத்தொகை

## பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்**


- சரோனா இம்மாகுளேற்றா
  வெண்டகோவன்,
  05, 1ம் குறுக்கு,
  கூலாவடி, மட்டக்களப்பு.
- S. அன்டன் றொமேஸ்,
  C/O, சகாயம்,
  7வது டிவிசன்,
  கொட்டகொட,
  ஸ்பிரிங்வெளி, பதுளை.
- தி. தினேசா,
  178/2, முருகன் ஆலய வீதி,
  பாலமீன்மடு,
  மட்டக்களப்பு.
- R. டினோ றாகல்,
  I 25, பனிச்சையடி,
  சத்துருக்கொண்டான்,
  மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 99 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  ஜோன் ஜிதேஷன் ஜெயராஜ்,
  65/2, திருச்செந்தூர் முருகன் கோவில் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  சந்திரகுமார் சர்மியா,
  57, விபுளானந்தபுரம்,
  மயிலம்பாவெளி.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  றெ. அக்ஷயன்,
  77, உடையார் வீதி,
  கல்முனை - 02.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org